**நாள். 18.03.2025**

**CC No. 11/2025**

ம.சா. 1

திரு. பரமேஸ்வரன்

த/பெ. அர்ஜிணன்

**சத்தியபிரமாண வாக்குமூலம்**

நான் பென்னாகரம், அரகாசனஹள்ளி பஞ்சாயத்து, ஏர்ரபட்டியில் குடியிருந்து விவசாய கூலிவேலை செய்துவருகிறேன். எனது விவசாய நிலம் எனது வீட்டிலிருந்து 150 மீட்டர் தூரத்தில் உள்ளது. கடந்த 04.04.2024–ம் தேதி காலை 07.00 மணிக்குமேல் இருக்கும். அப்போது நான் எனது தோட்டத்தில் மோட்டார் போட சென்றபோது, எனது சித்தப்பாவான மகாதேவன் என்பவர் என்னை பார்த்து "ஏன்டா மோட்டாரை ஆன்செய்கிறாய், தேவிடியா பயலே, கண்டாரஓலி பயலே என்று என்னை தகாத வார்த்தைகளால் திட்டி, தொண்ணையை எடுத்துவந்து எனது வலது தோள்பட்டையில் அடித்தார்". அவ்வாறு நான் அடித்தபோது கீழே விழுந்துவிட்டேன். மகாதேவன் என் கைஇரண்டையும் பின்னால் மடிக்கி பிடித்துகொண்டு எனது இடது தோள்பட்டையின் பின்புறம் வாயால் கடித்து குதிறிவிட்டார். முனிநாதன் கீழேயிருந்த கல்லை எடுத்துவந்து என்மீது போட்டார். அவருடன்வந்த கொளந்தை இரும்பு கம்பியால் வலது கெண்டை காலில் தாக்கியதில் உள்காயம் ஏற்பட்டது. கொளந்தையின் மகனான Justice Aliase என்னை கல்லால் கால்மீது தாக்கினார். முனியம்மாள் எனது முடியை பிடித்து ஆட்டி முதுகில் குத்தினார். கண்ணியப்பன் என்பவர் எதிரிகளுடன் சேர்ந்து என்னை கீழே தள்ளி கல்லால் தாக்கினார். அதாவது கீழே விழுந்த என்னை கூட்டமாக சேர்ந்து என்னை தாக்கியதாக சாட்சி கூறுகிறார். நான் வலி தாங்கமுடியாமல் கத்தினேன். பக்கத்துகாட்டில் உள்ள ரமேஷ், சுதா ஆகிய இருவரும் ஓடிவந்து தடுத்தனர். எதிரிகள் ஆறு பேரும் சேர்ந்து சட்டவிரோதமாக ஒன்றுகூடி என்னை தாக்கி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தனர். நானும் வலி தாங்கமுடியாமல் அந்த இடத்திலிருந்து ரோட்டில் ஓடினேன். அவ்வாறு ஓடும்போது அந்த வழியில் வந்த செந்தில் என்னை ஆட்டோவில் பென்னாகரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார். நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக 04.04.2024 ம் தேதி காலை 10 மணியளவில் 06.04.2024 ம் தேதி வரை சிகிச்சையில்

இருந்தேன். போலிசார் பென்னாகரம் அரசு மருத்துவமனையில் என்னை விசாரித்த சமயத்தில் என்னுடைய வாக்குமூத்தை வீடியோவாக எடுத்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேற்படி வாக்கமூலத்தின் அடிப்படையில் வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை. வழக்கு சம்பவத்திற்கு முன்பாகவே எதிரி கொளந்தை எனது மனைவியை தாக்கியதில் தருமபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு பெரும்பாலை காவல் நிலைய குற்ற எண்.213/2023 வழக்கானது பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. அந்த வழக்கில் எதிரி கொளந்தை கைது செய்யப்பட்டு ஜாமீனில் தான் வெளியே வந்தார். இந்த வழக்கானது ஏற்கனவே, 14.03.2025 ம் தேதியில் விசாரணைக்கு வந்தது. அப்போது எனது தரப்பு சாட்சிகள் அனைவரும் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்துவிட்டு வீட்டிற்கு போய் இருந்த சமயத்தில் மாலை நேரத்தில் எதிரிகள் சாட்சி ராமேஷ்,. சுதா ஆகியோர் வீட்டிற்கு போய் "சாட்சி சொன்னால் ஒழித்துவிடுவேன் : சாட்சி சொல்லிபார் என்ன செய்கிறேன் என்பதை பார்ப்பாய் " என்று மிரட்டியதாக என்னிடம் தெரிவித்தார்கள். எனவே எதிரிகள் சட்டவிரோதமாக ஒன்று கூடி என்னை தாக்கியதால் கொடுத்த வாக்குமூலத்தின் பேரில் போலிசார் வழக்கு எதுவும் பதிவு செய்யாததால் தான் தனிநபர் குற்ற முறையீடு தாக்கல் செய்துள்ளேன். எனவே, புகாரை ஏற்று எதிரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**மறு விசாரணை இல்லை.**

**நாள். 18.03.2025**

**CC No. 11/2025**

ம.சா. 2

திரு. அர்ஜீணன்

த/பெ. முனியப்பன்

வயது , 62

**சத்தியபிரமாண வாக்குமூலம்**

நான் பென்னாகரம், அரகாசனஹள்ளி பஞ்சாயத்து, ஏர்ரபட்டியில் குடியிருந்து விவசாய கூலிவேலை செய்துவருகிறேன். கடந்த 04.04.2024–ம் தேதி காலை 07.00 மணியளவில் எனது மகன் பரமேஷ்வரன் வயலுக்கு மோட்டார் போனான். அப்போது மகாதேவன், முனிநாதன், கொளந்தை, ஜஸ்டிஸ் (எ) விஜயன், முனியம்மாள், கன்னியப்பன் ஆகிய ஆறு பேரும் ஒன்றாக வந்து "ஏன் மோட்டார் எ டுத்து வந்தாய் என்று காண்டார ஓலி பையா, தேவிடியா பையா என்று தகாத வார்த்தையால் திட்டினார்கள். மகாதேவன் எனது மகனின் வலது தோள்பட்டையில் தொன்னையால் அடித்தார். முனிநாதன் பரமேஷ்வரனை கல்லால் முதுகு மீது அடித்தார். கொளந்தை இரும்பு கம்பியால் எனது மகனின் கால் மீது அடித்தார். முனியம்மாள் எனது மகனை கல்லால் முதுகு மீது குத்தினார். கன்னியப்பனும் எனது மகனை கல்லால் அடித்தார். ஜஸ்டிஸ் (எ) விஜயன் உள்ளிட்ட அனைவரும் சேர்ந்து தான் எனது மகனை அடித்தார்கள். அக்கம், பக்கத்தில் இருந்த பக்கத்துகொட்டாயை சேர்ந்த ரமேஷ், ராதா, ரங்கநாதன் ஆகியோர்கள் வந்து அதனை தடுத்துவிட்டார்கள். எனது மகனை பார்த்து எதிரிகள் அனைவரும்சேர்ந்து உன்னை உயிருடன் விடக்கூடாது கொன்று தீர்த்துவிடுவோம் என்று மிரட்டினார்கள். எனது மகனை பென்னாரம் அரசு மருத்துமவனைனக்கு அழைத்து சென்றேன். அங்கு இரண்டு நாள் சிகிச்சையில் இருந்தார். வழக்கு சம்மந்தமாக போலிசார் எனது மகனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். ஆனால்அதன் பேரில் வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை.

**மறு விசாரணை இல்லை.**

**நாள். 18.03.2025**

**CC No. 11/2025**

ம.சா. 3

திருமதி. ஜானகி

க/பெ. அர்ஜீணன்

வயது , 58

**சத்தியபிரமாண வாக்குமூலம்**

நான் பென்னாகரம், அரகாசனஹள்ளி பஞ்சாயத்து, ஏர்ரபட்டியில் குடியிருந்து விவசாய கூலிவேலை செய்துவருகிறேன். புகார் தாக்கல் செய்த பரமேஷ்வரன் எனது மகன். இதற்கு முன் சாட்சியம் அளித்த அர்ஜீணன் எனது கணவர். சுமார் 1 வருடத்திற்கு மேல் காலை 7 மணிக்கு மேல் இருக்கும் அப்போது எனது மகன் மோட்டார் போடுவதற்காக பக்கத்தில் உள்ள எங்களது தோட்டத்திற்கு போனான். அங்கு மகாதேவன், கொளந்தை, கன்னியப்பன், முனிநாதன், ஜஸ்டிஸ், முனியம்மாள் ஆகிய ஆறு பேரும் சேர்ந்து எனது மகனை தாறுமாறாக அடித்தார். மோட்டார் போட போனஎனது மகன் வராததால் என்னவென்று பார்க்கபோன நான் சத்தம் போட்டேன். எனது மகனை அடித்ததில் வலது கை, இடது கை, இடது தோள்பட்டை, வலது தோள்பட்டை ஆகிய இடங்களில் தாறுமாறாக காயம் ஏற்பட்டிருந்ததாகவும் கூச்சல் சத்தம் கேட்டு அங்கு வந்த பக்கத்துக்காட்டுக்காரர்கள் சுதா, ரமேஷ் ஆகியோர்கள் வந்து சண்டையை விலக்கிவிட்டார்கள். எனது மகனை பென்னாகரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம். எனது மகன் 15 நாள் சிகிச்சையில் இருந்தார்.

**மறு விசாரணை இல்லை.**